முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.243/2015**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 13.02.2024 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி திருமதி.S.Suganiya Sri, B.A.B.L., (Hons),M.L.,PGDAML. அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 13.02.2024 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | தங்கராஜி | வயது.. | 56 |
| தந்தை பெயர்.. | பாண்டியன் | கிராமம்.. | கல்குணம் |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 6,9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை...**

1. இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் வழக்கு சொத்து எனக்கு உரிமையான நிலம் என்பதற்காக. வழக்கு சொத்து எனக்கு பாத்தியமானது என்பதை காண்பிப்பதற்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன், அவை செட்டில்மெண்ட் மற்றும் பாகபிரிவினை பத்திரம். 6 மற்றும் 9 ஆம் பிரதிவாதி சாரங்கபாணி, தண்டபாணி ஆகியோருக்கு எதிராக குறிப்பிட்ட பரிகாரம் நீதிமன்றத்தில் கேட்டுள்ளேனா என்றால் இல்லை. கோவிந்தசாமி, ஜெகதாம்பாளுக்கு வாரிசுகள் யார் என்றால் பாலகிருஷ்ணன், கஸ்தூரி. வழகது சொத்துக்கள் கோவிந்தசாமியின் பூர்வீக சொத்துக்கள் என்றால் சரிதான்.

2. கோவிந்தசாமி, ஜெகதாம்பாளுக்கு ஒரே ஆண் வாரிசு பாலகிருஷ்ணன் என்றால் சரிதான். வழக்கில் சொல்லியுள்ள அனைத்து சொத்துக்களின் விவரமும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் 3 ஆம் மற்றும் 7 ஆம் இன சொத்துக்கள் தற்போது யார் அனுபவத்தில் உள்ளது என்றால் கரம்பாகதான் உள்ளது யாரும் அனுபவிக்கவில்லை. வழக்கு சொத்தில் 3 ஆம் மற்றும் 7 ஆம் இன சொத்துக்கள் யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் கலியமூர்த்தி பெயரில் உள்ளது ஆனால் அவர் பெயரில் தவறாக பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தவறான பட்டா மாற்றத்திற்கு வருவாய் துறையினரிடமோ

அல்லது காவல் நிலையத்திலோ புகார் கொடுத்தேனா என்றால் வருவாய்துறையினரிடம் புகார் கொடுத்தேன். எந்த தேதியில் புகார் கொடுத்தேன் என்றால் 2015. கலியமூர்த்தியின் குடும்ப விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். கலியமூர்த்திக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 3 மகன்கள் மட்டும் தான் அவர்கள் தண்டபாணி, சாரங்கபாணியை மட்டும் தெரியும் மற்றொருவர் பெயர் தெரியாது.

3. 6,9 பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர் வழக்குரையின் விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பாலகிருஷ்ணன் தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் உயிருடன் தான் இருக்கிறார். பாலகிருஷ்ணன் மற்றும் ஜெயலட்சுமி 02.05.1981 அன்று ஆவண பதிவு எண்.462ன் படி கலியமூர்த்திக்கு கிரயம் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் விசாரித்ததில் தெரிந்துக்கொண்டேன் ஆனால் பத்திரத்தை நேரில் பார்க்கவில்லை. எந்த ஆண்டில் விசாரித்து தெரிந்துக்கொண்டேன் என்றால் 2014. 2014ல் தெரிந்த பின்னிட்டு 6,9 பிரதிவாதிகளுக்கு தவறாக கிரயம் செய்யப்பட்டுள்ளது என்று அறிவிப்பு கொடுத்தேனா என்றால் இல்லை.

4. வழக்கின் 3வது இன சொத்தான புல எண்.102/11பி சேபெருமாள் குமாரர் வீரமுத்துவிற்கு உரிமையான சொத்து என்றால இல்லை. புல எண்.102/11 பி வீரமுத்து 1978ம் ஆண்டு கலியமூர்த்திக்கு பரிவர்த்தனை பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால அது தவறான பத்திரம். பரிவர்த்தனை பத்திரம் பற்றி எனக்கு வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு தெரியும் என்றால் விசாரித்ததில் 2014ல் தெரிந்துக்கொண்டேன். இந்த வழக்கு தாக்கல் செய்யும்போது மேலே குறிப்பிட்டுள்ள பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் செல்லாது என விளம்புகை பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் இல்லை. வழக்கின் 3வது இன சொத்து எங்கள் குடும்பத்திற்கு பாத்தியமான சொத்து இல்லை என்றாலும் அந்த சொத்து சேபெருமாளுக்கு பாத்தியமான சொத்து என்றால் சரியல்ல.

5. பாலகிருஷ்ணன் மற்றும் ஜெயலட்சமி 6,9 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்த 7வது இன சொத்து கிரயம் பொறுத்து பாலகிருஷ்ணன் மீது எதாவது நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. பாலகிருஷ்ணன் இந்த வழக்கில் தரப்பினர் இல்லை என்றால சரிதான். கலியமூர்த்திக்கு 4 மகன்களும்,1 மகளும் வாரிதாரர்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 6,9 பிரதிவாதிகள்

கலியமூர்த்தியின் வாரிசுகள் குறித்து எதிர் வழக்குரையில் குறிப்பிட்டிருந்தும் அவர்களை இந்த வழக்கில் நான் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. உரிய தரப்பினர்களை சேர்க்காத காரணத்தினாலும், உரிய முகாந்தரம் இந்த வழக்கில் இல்லை என்பதால் இந்த வழக்கு தள்ளுபடிக்கு உகந்தது என்றால் சரியல்ல. வழக்கு 1 - 7 இன சொத்துக்களுக்கு உரிய ஆவணங்கள் தாக்கல் செய்யாத காரணத்தினால் இந்த வழக்கு தள்ளுபடிக்கு உ கந்தது என்றால் சரியல்ல.14.07.1976 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் இந்த வழக்கிற்காக போலியாக தயாரித்தது என்றால் சரியல்ல. செட்டில்மெண்ட் ஆவணம் எழுதுவதற்கு ஜெகதாம்பாளுக்கு எந்த வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

**சாட்சி விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

sd/-S.Suganiya Sri,
Principal District Munsif (FAC)
Chidambaram.